9—

திருக்கோயிலைப் புனரமைத்தல்

***34870—டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, சீவாடி அருள்மிகு விநாயகர் திருக்கோயிலைப் புனரமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா எனும் தெய்வத்தை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதி, சீவாடி அருள்மிகு விநாயகர் திருக்கோயில் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான திருக்கோயில் ஆகும். தற்போது இத்திருக்கோயில் சிதிலமடைந்துள்ளது. இத்திருக்கோயிலின் புனரமைப்பு தொடர்பாக தொல்லியல் வல்லுநர்மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கருத்துரு பெறப்பட்டுள்ளது. மண்டல அளவிலான பரிசீலனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்போது மாண்பமை உயர் நீதிமன்றம் அமைத்துள்ள குழுவின் கூட்டத்தில் வைக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் புனரமைப்பு செய்திட மாண்புமிகு அம்மாவின் அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தலைவர் குடிகொண்ட இடந்தன்னை தமிழர்களின் கோயில்" எனக் கொண்டு வாழும் எம் தலைவருக்கு வணக்கம். எங்களது துணைத் தலைவருக்கும் வணக்கம். ஆன்மா லயிக்கின்ற இடத்தைத்தான் நம் முன்னோர்கள் ஆலயம் எனப் பெயரிட்டார்கள். ஆனால், செய்யூர் தொகுதியில் இலத்தூர்

2019 ஜனவரி 4]

ஒன்றியத்திற்குட்பட்ட சீவாடியில் அமையப்பெற்ற 100 ஆண்டுகள் பழமைவாய்ந்த செல்வ விநாயகர் கோயிலின் மேல்தளம் மிகவும் சிதிலமடைந்து, அந்த மேல்தளத்தினை சிலை தாங்கி நிற்கின்ற நிலை உள்ளது. அதனால், மிக விரைவில் அதனைச் சீரமைக்க இந்த அரசு முன்வருமா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற குழுக் கூட்டத்தில் ஒப்புதல் பெறுவதற்காக இந்தப் பொருள் வைக்கப்பட்டுள்ளது. விரைவில் குடமுழுக்கு செய்திட மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

முற்பகல் 11-05

டாக்டர். ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 2011 ஆம் ஆண்டிலிருந்து பெரும்பான்மையான கோயில்களில் டிரஸ்ட்-ஐ நியமிக்காததாலும், குறைந்தது தர்மகர்த்தாவைக்கூட நியமிக்காத நிலையினாலும், சீவாடி செல்வ விநாயகர் கோயில் போலவே, சுமார் 1,000 ஆண்டுகள் பழமைவாய்ந்த 100 ஏக்கர் நிலத்தையும் தன்னகத்தே கொண்ட நடுவிளாகம் திருகாமேஸ்வரன் கோயில் பல ஆண்டுகள் புனரமைப்பின்றியும், பராமரிப்பின்றியும் சிதிலமடைந்திருந்தது. ஆகவே, மக்களின் உணர்வுகளுக்கும், நம்பிக்கைக்கும் மதிப்பளித்து செய்யூர் தொகுதியில் சிதிலமடைந்துள்ள அனைத்துக் கோயில்களையும் புனரமைக்க அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கோரிக்கை வைத்து அமர்கின்றேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகம விதிகளுக்குட்பட்டு 12

ஆண்டுகளுக்கு ஒருமுறை திருக்கோயில் குடமுழுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசால் நடத்தப்பட்டு வருகிறது. தமிழகத்திலுள்ள பெரும்பாலான திருக்கோயில்கள் தொன்மை வாய்ந்தவையாகும். திருக்கோயில்களின் பழமை மாறாமல் திருப்பணிகள் நடத்துவதற்கு, உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்பேரில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டு, குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் மட்டுமே திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் நடத்தப்பட வேண்டும். உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் உயர் மட்டக் குழுவின் வல்லுநர்களை வரவழைத்து கூட்டம் நடத்தி, ஒப்புதல் பெறுவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால், சிறிது காலதாமதம் ஏற்படுகிறது. இருப்பினும், தற்போது இந்த உயர்மட்ட வல்லுநர் குழு மாதம் இரண்டு முறை கூட்டப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டளையிட்டதன் அடிப்படையில், விரைவாக அனைத்துத் திருக்கோயில்களுக்கும் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

செயற்கை இழை ஓடுதளம்

***37522—திரு. ரா. தமிழ்ச்செல்வன்:** *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக ரோலர் ஸ்கேட்டிங் வளையத்தில் செயற்கை இழை ஓடுதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மாவின் கனவை நனவாக்க விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில்*